**செய்தி வெளியீடு எண்:340** **நாள்:25.06.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (25.6.2013) தலைமைச் செயலகத்தில், சென்னை, கிண்டி அரசினர் மகளிர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் 1 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் புதிய வளாகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் திறந்து வைத்தார்கள்.

வேலை நாடுநர்களின் விவரங்களை பதிவு செய்தல், பதிவு செய்தவர்களின் விவரங்களை வேலை அளிப்பவர்களுக்கு பரிந்துரை செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு குறித்த தொழில் நெறி வழிகாட்டுதல், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இளைஞர்களை ஆயத்தப் படுத்துதல் ஆகிய பணிகளை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மேற்கொண்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு, இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் பள்ளி இறுதி மற்றும் மேல்நிலை கல்வி தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர் தாங்கள் பயிலுகின்ற பள்ளியிலேயே வேலைவாய்ப்பு பதிவினை ஆன்–லைன் மூலம் பதிவு செய்யும் முறையினை நடைமுறைப் படுத்தி வருகின்றது.

இதவரை சென்னை, சாந்தோமில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில்நுட்பம்), மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகிய மூன்று அலுவலகங்கள் இந்தப் புதிய அலுவலக வளாகக் கட்டடத்தில் இயங்கும். சென்னை நகரில் சாலை மற்றும் ரயில் போக்குவரத்து வசதிகள் ஒருங்கே அமையப்பெற்ற பிரதான இடமான கிண்டியில் இம்மூன்று அலுவலகங்களும் தற்போது இயங்குவதால் வேலைவாய்ப்பு கோரி பதிவு செய்ய வருபவர்கள் எளிதில் வந்து செல்ல இயலும்.

இந்த ஒருங்கிணைந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகம் 9747 சதுர அடி நிலத்தில், 6727 சதுர அடி பரப்பளவில், 1 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் புதிய வளாகக் கட்டடத்தில், போதுமான இடவசதியுடன் கூடிய அலுவலக அறைகள்,

வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்ய வரும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பதிவு செய்யும் அறைகள், பதிவாளர்கள் காத்திருக்கும் அறைகள், கூட்ட அறை, வாகனம் நிறுத்தும் இடம் என அலுவலகத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் :  25.6.2013